*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை*
*21 03 2026 SATURDAY 6.30 PM*
*மாநிலச் செய்திகள்*

*<u>தலைப்புச் செய்திகள்</u>*

1. சர்வதேச கடல்வழி போக்குவரத்து சுதந்திரமாக நடைபெறுவது உறுதி செய்யப்பட வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.
2. நாட்டின் தொழில் வளர்ச்சி மையமாக தமிழகம் மேம்படுத்தப்பட்டுள்ளதாக திமுக தெரிவித்துள்ளது.
3. திமுக ஆட்சியில் பெண்கள், முதியவர்கள் என அனைவருக்கும் பாதுகாப்பு இல்லாத சூழல் ஏற்பட்டுள்ளதாக பிஜேபி கூறியுள்ளது.
4. தமிழகத்தில் வாக்காளர்களுக்கு பணம் மற்றும் பரிசுப்பொருட்கள் வழங்குவதை தடுக்க கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.
5. மும்பை சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் – ஜீவன் நெடுஞ்செழியன் இணை பட்டம் வென்றது.

*<u>இனி விரிவான செய்திகள் –</u>*

<<<<<<<>>>>>

மேற்காசிய பகுதியில் அமைதி, அரசியல் நிலைப்பாடு மற்றும் வளர்ச்சி உறுதி செய்யப்படும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடியும், ஈரான் அதிபர் டாக்டர் Masoud Pezeshkian-ம், நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

பிரதமர் இன்று ஈரான் அதிபரை தொலைபேசியில் தொடர்புகொண்டு ரமலான் வாழ்த்துகளை கூறியபோது, இரு தலைவர்களும் தங்களது கருத்தை தெரிவித்தனர்.

தமது சமூக வலைதளத்தில் இதை தெரிவித்துள்ள பிரதமர், மேற்காசியப் பகுதியில் உள்ள கட்டமைப்புகள் தாக்கி அழிக்கப்பட்டதை இந்தியா கண்டிப்பதாக கூறினார்.

மண்டல அளவிலான ஸ்திரத்தன்மைக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையிலும், உலகளாவிய சரக்கு போக்குவரத்து கட்டமைப்புக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலும் தாக்குதல்கள் நடைபெறுவதாக அவர் கூறினார்.

சர்வதேச கப்பல் போக்குவரத்து சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம் என்றும், கடல்வழித் தடங்கள் எப்போதும் திறந்துவைக்கப்பட்டு இருக்க வேண்டும் என்றும், பாதுகாப்பும் உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஈரானில் உள்ள இந்திய மக்களுக்கு அளிக்கப்பட்டு வரும் பாதுகாப்புக்கு நன்றி தெரிவிப்பதாகவும் பிரதமர் தமது சமூக வலைதள பதிவில் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>

மாணவர்கள் நவீன மற்றும் முற்போக்கு சிந்தனையுடன் வளமான நாட்டின் பன்முக கலாச்சார பாரம்பரியத்தையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

மகாராஷ்ட்ரா மாநிலம் நாக்பூரில் இன்று 29-ஆவது தேசிய இளையோர் நாடாளுமன்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அவர், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் முயற்சியில் இளைஞர்கள் தங்களது பங்களிப்பை செலுத்த

*வேண்டும் என்றும், நாட்டின் ஒற்றுமைக்கும், இறையாண்மைக்கும் பாடுபட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.*

*தற்போது உலக அளவில் நடைபெற்றுவரும் மோதல்கள் பற்றி குறிப்பிட்ட குடியரசு துணைத்தலைவர், பேச்சுவார்த்தை மற்றும் விவாதங்கள் மூலமே அவற்றுக்கு தீர்வுகாண முடியும் என்று கூறினார்.*

*தேசிய இளையோர் நாடாளுமன்ற நிகழ்ச்சிகள் இன்று முதல் நான்கு நாட்கள் நடைபெறவுள்ளன.*

*<<<<<<<>>>>>*

*நாட்டின் தொழில் வளர்ச்சி மையமாக தமிழகம் மேம்படுத்தப்பட்டுள்ளதாக திமுக தெரிவித்துள்ளது*

*இதுகுறித்து அக்கட்சி இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், 51 சிறப்பு பொருளாதார மண்டலங்களோடு தமிழகம், நாட்டிலேயே முதலிடம் வகிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*புதிதாக பயன்பாட்டுக்கு வந்துள்ள 10 சிறப்பு பொருளாதார மண்டலங்கள் மாநிலத்தின் வளர்ச்சிக்கும், பல்லாயிரக்கணக்கான மக்களின் வேலைவாய்ப்புக்கும் வழிவகுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*திமுக ஆட்சியில் உலகளாவிய முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, தொழில் கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*<<<<<<<>>>>>*

*திமுக ஆட்சியில் தமிழகத்தில் போதைப்பொருள் புழக்கம் அதிகரித்துள்ளது என்றும், பெண்கள், முதியவர்கள் என அனைவருக்கும் பாதுகாப்பு இல்லாத சூழல் ஏற்பட்டுள்ளதாகவும் பிஜேபி மூத்த தலைவர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.*

*கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், விளாத்திகுளத்தில் 12-ஆம் வகுப்பு மாணவி பாலியல் வன்கொடுமை செய்து கொல்லப்பட்ட சம்பவம் கொங்கு மண்டலத்தில் முதிய தம்பதியினர் கொலை சம்பவம் போன்றவற்றை பட்டியலிட்டார்.*

*மாநிலத்தில் கடந்த ஐந்தாண்டுகளில் குடிநீர் கட்டணம், சொத்துவரி போன்றவை உயர்த்தப்பட்டுள்ளதால் மக்கள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளதாகவும் டாக்டர் எல். முருகன் கூறினார்.*

*<<<<<<<>>>>>*

*சட்டப்பேரவைத் தேர்தல் தொடர்பான தயார் நிலை குறித்து மாநில தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக், சென்னை உள்ளிட்ட நான்கு மாவட்டங்களின் காவல்துறை மற்றும் தேர்தல் அதிகாரிகளுடன் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.*

*சென்னை தலைமைச்செயலத்தில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில், சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களின் தேர்தல் அதிகாரிகள், காவல் ஆணையர்கள், மாவட்டங்களின் காவல் கண்காணிப்பாளர்கள், தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்ட பொதுப் பார்வையாளர்கள், காவல் மற்றும் செலவினப் பார்வையாளர்கள் பங்கேற்றனர்.*

*<<<<<<<>>>>>*

*தமிழகத்தில் தேர்தல் நடத்தை நெறிமுறைகள் அமலில் உள்ள நிலையில், வாக்காளர்களுக்கு பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் வழங்குவதை தடுப்பதற்கான நடவடிக்கைகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

*100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி, மாநிலம் முழுவதும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டு வருகின்றன.*

*சேப்பாக்கம், திருவல்லிக்கேணி, கொளத்தூர், வில்லிவாக்கம் சட்டப்பேரவை தொகுதிகளுக்குட்பட்ட பகுதிகளில் பதாகைகள் ஏந்தி பேரணிகள் மூலம் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.*

*வேலூர் மாவட்டம் குடியாத்தம் பகுதியில் போதிய ஆவணங்கள் இன்றி எடுத்துச் செல்லப்பட்ட 4 லட்சத்து 20 ஆயிரம் ரூபாயை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.*

*திருப்பத்தூரில் உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட ஒரு லட்சத்து 97 ஆயிரத்து ஐநூறு ரூபாயை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.*

*திருச்சி மாவட்டம் செங்கரையூர் அருகே மேற்கொள்ளப்பட்ட வாகன சோதனையில் ஆவணங்கள் இன்றி எடுத்துச் செல்லப்பட்ட ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபாயை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.*

*பெரம்பலூர் மாவட்டத்தில் இருவேறு இடங்களில் நடத்தப்பட்ட வாகன சோதனையின்போது உரிய ஆவணங்கள் இன்றி எடுத்துச் செல்லப்பட்ட ஒரு லட்சத்து 89 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான பணம் மற்றும் பாத்திரங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.*

*மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே உரிய ஆவணங்கள் இன்றி எடுத்து செல்லப்பட்ட 56 வணிக சிலிண்டர்கள் பறக்கும் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டது.*

*<<<<<<<>>>>>*

*திருநெல்வேலி மாவட்டத்தில் இதுவரை முறையான ஆவணம் இன்றி கொண்டு செல்லப்பட்ட 19 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான பணம் மற்றும் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக மாவட்ட தேர்தல் அலுவலர் திரு சுகுமார் தெரிவித்துள்ளார்.*

*தேர்தல் நடத்தை நெறிமுறை மீறல் தொடர்பாக 39 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், இதில் 33 வழக்குகளுக்கு தீர்வுகாணப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.*

*வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்கு இம்மாதம் 27-ஆம் தேதிவரை விண்ணப்பிக்கலாம் என்றும் அவர் கூறினார்.*

*மாவட்டம் முழுவதும் தேர்தல் நடத்தை நெறிமுறைகள் மீறப்படுகிறதா என்பதை மாவட்ட நிர்வாகம் தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும் திரு சுகுமார் தெரிவித்தார்.*

*<<<<<<<>>>>>*

***<u>மாவட்டச் செய்திகள்</u>***

***நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே காட்டேரி பூங்காவில் இயற்கை சாகுபடியாளர்களுக்கான பயிற்சி 26 நாட்கள் நடைபெறுகிறது. ஆர்வம் உள்ளவர்கள் இதில் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.***

***---------------***

***திருத்தணி சுப்பிரமணியசாமி திருக்கோயிலின் மலைப்பகுதியில் ஞாயிறு மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் கூட்ட நெரிசலை கருத்தில் கொண்டு ஆட்டோக்கள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.***

***--------***

***சேலம் மாவட்டம் மேட்டூர் அருகே சூறாவளி காற்றுடன் பெய்த கனமழை காரணமாக சுமார் 10 ஆயிரம் வாழை மரங்கள் முறிந்து சேதமாயின.***

***--------------***

***மயிலாடுதுறை மாவட்டம் திருமெய்ஞானம் பகுதியில் ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமே திறக்கப்பட்ட அதிசய கிணற்றில் ஏராளமானோர் புனித நீராடினர்.***

***<<<<<<<>>>>>***

***<u>விளையாட்டுச் செய்திகள்</u>***

***மும்பையில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் – ஜீவன் நெடுஞ்செழியன் இணை பட்டம் வென்றது.***

***இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை, 6-3, 6-4 என்ற செட் கணக்கில், ஸ்வீடனின் Leo Borg – யுக்ரைனின் Yurii Dzhavakian இணையை வென்றது.***

***--------------***

***மெக்சிகோவில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அர்ஜுன் கதே- ரித்விக் இணை இறுதியாட்டத்துக்கு முன்னேறியுள்ளது.***

***ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 7-6, 7-6 என்ற செட் கணக்கில், அர்ஜென்டினாவின் Facundo Mena – மெக்சிகோவின் Rodrigo இணையை வென்றது.***

***---------------***

***ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் கேரளா இன்று பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.***

***கொச்சியில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.***

***<<<<<<<END>>>>>***